K. CHIDAMBARANATHA MUDALIAR,
23 JUN 1914
SHIYALI.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அறுபத்துமூன்றுநாயன்மார்களில்

# கண்ணப்பசுவாமிகள்

## சரித்திரக்கீர்த்தனம்.

——)(:*:)(——

Cl. 33723
1783

இஃது

சேலம் முனிசிபல் காலேஜ்

தமிழ்ப்பண்டிதர்

சா. சரவணப்பிள்ளையவர்கள்

இயற்றியது.

T. 6697

கங்கைவல்லி

ஸ்ரீமாந்

வை. கநகசபாபதிமுதலியார்

அவர்களுதவியால்

சேலம்

மநோன்மணியச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

கர - ௵ ஆவணி - ௴.

1891.

Registered Copy-right.

உ

சிவமயம்.

திருகைலாசபரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து
அடியர்குழாத்துளொருவராகிய ஸ்ரீகாளஹஸ்தி

## தொண்டர்சீர்பரவுவார்சுவாமிகள்

இயற்றியசிறப்புக்கவிகள்.

---

உ
சீராருஞ்சது
மறையுமான்முத
ற்புங் கவரெவரு
ந்தேடத் தேட -
நேராதே யவர்சி
வச்செயற்கொளி
க்குங்காளத்திம
லர்தம்பா - லரா
தஅன்புமிகுந் தாறுதினத்தினிற்பெரும்பே றடைந்தசெ
ல்வக் - காராரும்பொழிலுடுப்பூர்க்கண்ணப்பர்சரித்திரத்
தைக்கசியுமன்பால். (க). சங்கமிகுங்குரவர்சிகாம
ணியெனுஞ்சுப்பிரமணியதயாளுங்கேட்டுப் -
பொங்குமுறக்குதுகலிக்கப்பிரசங்கமது
ப்பொழியும்புகழ்சேர்கொண்மூ -
தங்கமெனச் சொலுஞ்சாமி
நாதவேள் செய்தவத்துத்தந
யனை - எங்கள்சரவணக்கவிஞன்
கீர்த்தனமா யறிஞர்கொள வியம்பினு
னல். (உ). அன்னசரித் திரத்தையச்சிட் டனை
வருக்கு முபகரித்தா னவனு ரென்னில் - மன்ன
ர்மன்னர் புகழ்கங்கை வல்லிவையா புரிமகிபன் மை
ந்தனியாரும் - கன்னனைப்பின் னெனுங் கொடையான்
ஸ்ரீ கநகசபாபதிச்சுகுணன்.
கற்றோர் மெச்சு - நன்னயவா ளிவன்புகழை யின்
னுமெவர் தாம்புகழார் நாட்டின் மாதோ. (ங).

---

உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

சென்னையைச் சார்ந்த - குளை

ஸ்ரீ (உ) ஸ்ரீ

## சோமசுந்தரநாயகரவர்கள்

இயற்றியது.

திங்களணி மணிமாடந் திகழ்தருசீர்க் காளத்திச் சிமய மேவுங், கங்கையில கியசடிலச் சண்ணுதலெம் பரம்பரன்றாள் கருதி யன்பு, பொங்கியழு விருநாளி லூனமுதிட் டரன்வலப்பாற் பொருந்தப் பெற்ற, துங்கமிகு தவத்தர்திருக் கண்ணப்பர் துகளறுநற் சரிதந் தன்னை. (க)

மலயமுனி வரனிசைத்த முத்தமிழி னிடையமர்ந்து மன்னு மேன்மை, நிலவுமிசைத் தமிழ்ப்பாவாற் புலவருளங் களிதூங்க நெடிதி னீந்தான், இலகியவப் பெருந்தகையா ரெனினுமையாள் மயிலுருக்கொண் டெம்பி ரானை, நலமுறப்பூ சித்ததிரு மயிலாடு துறையினைத்தன் னகராக் கொண்டோன். (உ)

கம்பனியற் றியராமா யணக்கவியிற் புதைபொருளாய்க் கவினப்பெற்றுப், பம்பியவுட் பொருளனைத்து முலகினுளோர்க் குபகரிக்கும் பரிசி னுலக், கம்பனிவ னேயெனச்சொல் சாமிநா தப்பெயர்கொள் கவிஞர் கோமான், உம்பர்பிரான் றனைவழுத்துந் தவமேயோர் சுதனென்னு முருவங் கொண்டோன். (௩)

விதுவணிசெஞ் சடைப்பெருமா னடிபரவா தலைவுறுந்தீ வினையி னோரை, இதுதகா தெனவிடித்தங் கறிவூட்டித் தெளிவிக்கு மியற்கைவாய்ந்தோன், பதிபசுபா சத்தினியல் பிதுவிதுவென் றுளங்

தெரிந்த பண்பி னோங்கித், துதிபெருக நில்வுலகிற் புகழ்விளைக்கும் பெருமையினாற் றுன்னி வாழ்வோன். (ச)

*கெண்டையழ கெனும்பொருளி னமைதிரிசொ லுறுநகரிற் கிளர்வுற் றோங்கி, மண்டுபுகழ் முனிசிபல்கா லேஜிலெவர் களும்வழுத்த மன்னி நாளுந், தண்டருஞ்சீர்த் தமிழ்த்தலைமைப் புலமைநடத் திடுங்கருணைத் தடங்குன் றன்னான், பண்டயன்மாற் கரியபரா னடிபரவுஞ் சரவணப்பேர்ப் பாவலோனே (ரு)

*கெண்டை = சேல் } சேலம்.
அழகு = அம் }

---

கோயமுத்தூர் காலேஜ் தமிழ்ப் பண்டிதர்

கும்பகோணம் மகா ா. ா. ஸ்ரீ

## R. சபாபதிப்பிள்ளையவர்கள்

இயற்றியது.

நீர்பூத்த மதிமுடியா ரடியார்தம் மனத்தகலா நிமலர் குன்றின், வார்பூத்த முலைக்கொடிதன் னிடம்பூத்த காளத்தி வரதர் பாதத், தேர்பூத்த வன்பினருச் சித்தனை யருத்திவிழி யிடந்து சாத்துஞ், சீர்பூத்த கண்ணப்ப தேவர்திருப் புராணமதைத் தெளிவி னோர்ந்தே. (க)

எந்நூலிற் றேர்ந்தவரு மமையுமென விசைநூலி னிசைத்த வாறே, பன்னூலின் பொருள்களெலாம் விளங்கவெழிற் கீர்த்தனமாப் பாடித் தந்தான், றென்னூல்கள் பலவுணர்ந்தோன் றோலாத பிரசங்கத் தொடர்பு பூண்டோன், நன்னீர்மை மிகவுடையோன் விடையீசன் றிருவடியே நாடு மேலோன். (உ)

மாமகளுக் கிடமாய சேலநகர்த் தலைக்கல்வி வளர்சாலைக்கண், நாமகண்மற் றிவனென்ன மாணவரைப் பயிற்றுவிக்கு ஞான முள்ளோன், தேமகல்சீர்ச் செய்யுள்புகல் சாமிநா தக்கவிஞன் சேயாய் வந்தோன், பூமகளிற் பொறை யுடையோன் சரவணமென் றுலகுரைக்கும் புலவ ரேறே. (ங)

---

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

## வரலாறு.

பரமேதிகாசமாகிய சிவரகசியத்திலே உமாதேவியார்க்குச் சிவபெருமானால் உபதேசிக்கப்படும் பெருமைவாய்ந்த திருத்தொண்டர்களில் ஒருவராகிய இக்கண்ணப்ப சுவாமிகளுடைய திவ்யசரித்திரமானது, ஸ்ரீநடராஜவள்ளலார் "உலகெலாம்" என்று முதலடியெடுத்துக்கொடுத்தருள, ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் பாடிமுடித்தருளிய பெருங்காப்பியமாகிய பெரியபுராணத்திலே விரித்துரைக்கப்பட்டிருக்கின்றது. இத்தெய்வக்கதையிலன்புடைய மூதறிவாளர்பலர் இதனைக்கீர்த்தனம், நாடகம் முதலிய பலவகையாகச்செய்துள்ளார். சிலநாளைக்குமுன் எனது நண்பரொருவர் இச்சரித்திரத்தைப்பஜனரூபமாகச்சிரவணம் பண்ணவிரும்பினர்; அப்போது சிலசந்தர்ப்பங்களுக்குமாத்திரம் சில கீர்த்தனங்களை யமைத்துக்கொண்டு நடத்தப்பட்டது. பின்பு சரித்திரமுழுதும் பூர்த்தி செய்யப்பட்டது. "கண்ணப்பனொப்பதோ ரன்பின்மை *யென்றமையாற்-கண்ணப்ப னொப்பதோ ரன்பதனைக்-கண்ணப்பர்-தாமறிதல் காளத்தி யாரறித லல்லதுமற்-றாரறியு மன்பன் றீது." என்று புகழ்ப்பெற்ற நமது கண்ணப்பசுவாமிகள்பெருமையானது, 'சங்கரனருள் தமதுசிரங்கொள் திருத்தொண்டர் புராணத்தை யளவிட நஞ்சேக்கிழார்க்கெளிதலது தேவர்க்குமரிதே' என்றபடி நமது அருண்மொழித்தேவரேயளந்துரைக்கும் பெற்றியதாக, அதனைச்சிற்றுணர்வுடையேன் புன்மொழிகொண்டு கூறப்புகுந்தது முற்றும் பொருந்தாதாயினும், அச்

---

* ஸ்ரீ மாணிக்கவாசகசுவாமிகள், தமது திருவாசகம், திருக்கோத்தும்பியில்.

சேக்கிழார் பெருமான் ' அடியவர் திருப்புகழை யெவ்வாற்றுனும்புனைந்துரைப்பதிற் றுணிவுபிறந் துலகுய்யுநெறியெய்துக ' என்னுங்கருத்தைப்புலப்படுத்தி, அவையடக்கவாயிலாக வருளிச்செய்த " இப்பொருட்கென்னுரைசிறிதாயினு-மெய்ப்பொருட்குரியார் கொள்வர் மேன்மையால் " என்னும் அருண்மொழியை ஆதரவாகக்கொண்டும், ஆசைமேற்கொண்டும் இது செயயத்துணிந்தேனுதலால், பெரியோர் என்பிழைபொறுத்தருளக்கடவர்.

இச்சரித்திரமுழுதுங் கண்ணிகளுங் கீர்த்தனங்களுமாகவே செய்திருக்கிறது ; இடையிடையே விருத்தங்களில்லை. கண்ணிகளெல்லாம் ஒரேதன்மையவாயினும், வேண்டிய வண்ணம் இராக தாளங்களமைத்துப் பாடிக்கொள்ளலாம். சரித்திரத்தில் ஆங்காங்கு அமைந்திருக்கும் சில திரிசொற்களுக்குப் பொருளை அங்கங்கே குறித்தும், சிலசந்தர்ப்பங்களில் விரித்துரைக்கவேண்டிய விஷயங்களைச் சரித்திரத்தின் இறுதியிலே ஒருங்குதிரட்டி அநுபந்தமாகச்சேர்த்துமிருக்கிறேன்.

இப்புத்தகத்தைக்கண்ணுறும் சைவாபிமானிகள் பலருந் தயைசெய்து எல்லாப்பிரதிகளும் விரைவிற்செலவாகும்படி உபகரிப்பார்களாயின், இப்போது சித்தமாயிருக்கிற திருநாவுக்கரசு சுவாமிகள் சரித்திரக்கீர்த்தனம்,முதலிய நூற்களை யச்சிட்டுவெளிப்படுத்த ஏதுவாகும். அடியேன் மேற்கொண்டமுயற்சி யினிதுமுடியுமாறு திருவருள் கூட்டிமுடிக்க. சுபம் ! சுபம் !!

| | | | |
|---|---|---|---|
| இப்புத்தகம் பிரதி ஒன்றுக்கு விலை | 0 | ௪ | 0 |
| தபாற் கூலி | 0 | 0 | ௯ |

பத்துப்பிரதி சேரவாங்குவோர்க் கொருபிரதிஇலவசமாகக் கொடுக்கப்படும்.

இங்ஙனம்,
சா. சரவணப்பிள்ளை.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# கண்ணப்பசுவாமிகள்

## சரித்திரக்கீர்த்தனம்.

### விநாயகதோத்திரம்.

சீர்மருவு பத்திநெறி யொழுகியிறை யவனடிசேர்
செல்வம் வாய்ந்த
பேர்மருவு திருத்தொண்டர் தம்மிலுயர் கண்ணப்பர்
பெரிய காதை
யேர்மருவு மிசைகலந்து தமிழிலிசைத் திடப்பரம
னீன்ற கொன்றைத்
தார்மருவு புயத்தெங்க ளைங்கரன்பொற் பங்கயத்தாள்
சார்ந்து வாழ்வாம்.

கீர்த்தனம் - இராகம் - கேதாரம் - ஆதிதாளம்.

### பல்லவி.

கஜானனு சரணம்-ஜயஜய
கஜானனு சரணம்.

### அநுபல்லவி.

அஜாதி தேவர்ப ணிந்தி டும்பதனே
அம்பி காபதிமு னந்த ருஞ்சுதனே கஜானனு.

*அஜன்-பிரமன்

### சரணங்கள்.

க. விக்கநி வாரணனே-†திருமுறை
வெளியிடுங் காரணனே
துக்க வாரிதிக டத்தி டும்பரனே
துஷ்ட கஜமுகனை யட்ட ஐங்கரனே கஜானனா.

உ. பாசாங் குசதரனே-வாமருள்
பரமத யாகரனே
தேசா ரும்முரு கேசசகோதர
திவ்ய மங்களசொ ரூபம னோகர கஜானனா.

ந. கண்ணப்ப ஞர்நல்ல-கதையைக்
கனியும்பண் ணுடிசொல்ல
நண்ணுமெ னக்குத்து ணையாக நீதானே
நாடி வந்தருளு வாயெங் கோமானே கஜானனா.

---

## நூல்.

### கண்ணிகள்.

இராகம் - பியாகு - மிசிரசாபுதாளம்.

பூவுலகம்புகழ் போத்தப்பிநாட்டிற்
பொலியுடுப்பூரினில் வாசன்
மேவுங்கொடுமையெக் காலும்புரிந்திடும்
வேடர்குலத்துக்கு ராசன் (க)

தத்தைநிகர்மொழித் தத்தையெனும்பெயர்ச்
சற்குணியோடுறை யோகன்
எத்திசையும்முள வேடர்பணிந்திடும்
ஏந்தலவன்பெயர் நாகன் (உ)

---

†திருமுறைகண்டபுராணத்திற்காண்க.

பத்தினியாளோடு கூடி மகிழ்ந்து
பலபகலின்பொடு வாழ்ந்தான்
புத்திரரின்மையி ஞலேமனத்தினிற்
பொங்கியதுன்பத்தி லாழ்ந்தான் (௩)

மக்களில்லாதவர்க் கெத்தனைசெல்வம்
மலைமலைபோலிருந் தாலும்
துக்கமல்லாமற் சுகமெனயாவரும்
சொல்லவொண்ணுதொருக் காலும் (௪)

மக்கள்புகன்றிடு மிக்காரசங்கொள்
மழலைச்சொலொன்றினைக் கேட்டார்
தக்கபுல்லாங்குழல் வீணையினேசை
தனக்குந்தங்காதினை நீட்டார் (௫)

அரியபுதல்வர் சிறியகையாலே
அளையப்பெறுதநற் சோறு
எரியும்விஷம்புழுக் கூட்டமல்லாவிடி
லினமுறுமலச் சேறு (௬)

சிந்தையிவ்வாறு வருந்தியநாகனுந்
தெய்வம்வழிபடத் தொடுத்தான்
சந்ததக்குன்றுதோ றுடுமுருகர்க்குத்
தக்கபணிசெய அடுத்தான் (எ)

பூசைநடத்தி மயிலொடுசேவல்
பொருந்தவிடுத்தன்பு நீடினன்
தேசுபெறுமுரு கேசனைவேண்டித்
தினமுஞ்சிறப்புக்கொண் டாடினன் (அ)

எந்தைமுருகன் றிருவருளாலே
யினியவோராண்மகப் பெற்றான்

சந்ததியில்லாத துன்பமொழிந்திடச்
சாரும்பெருங்களிப் புற்ருன் (கூ)

கீர்த்தனம் - இராகம - காபி - ஆதிதாளம்.

பல்லவி.

திருவவ தாரஞ்செய் தாரே-எங்கள்
சிவனடிக்கன்பராங கண்ணப்பஞரே.

அநுபல்லவி.

அருமறைமுனிவர்க ளுளமகிழ்கூர
அகிலபுவனவுயிர களுங்கதிசேர திரு.

சரணங்கள்.

க. மெய்ம்மையானபத்தி மார்க்கந்துலங்க
பொய்ம்மைமலிந்தபுறச் சமயங்கலங்க திரு.

உ. நாகன்மனத்துயர நீங்கிககளிகக
நாடுங்கொடியபாவ மோடியொளிகக திரு.

ங. வேடர்யாரும்விருந் தொடுகளியாட
விண்ணவர்மலர்மழை சொரிந்துகொண்டாட திரு

---

வேறு கண்ணிகள்.

கையிலெடுத்துக் கனத்ததுகண்டிந்தக
கான்முளைதிண்ணனென் றனே
ஐயனுக்கன்பரா மெம்பெருமானுக்
கதுபெயராச்சுது தானே (கo)

உற்றவணிபல சூடிவளர்க்க
ஒளிமதிபோலவே யோங்கினா

பெற்றவர்க்கின்பம பெருகக்குதலைகள்
பேசும்பருவமு நீங்கினூர் (கக)

சங்கரனூருக்குச் சம்பந்தமாகிய
தன்மையறிந்தவர் போலே
சிங்கம்புலிகலை யானையின்குட்டிகள்
சேரவளர்த்தான் பாலே (கஉ)

வேடர்மரபுக் குரியசிலைத்தொழில்
மேவும்பருவத்திற் கற்றனர்
பாடுபெறுமிவர்க் கீடிலையென்று
பரவும்பெரும்புகழ் பெற்றனர் (கரு)

காட்டில்விலங்கு மலிந்திடர்செய்திடக்
கானவர்நாகனைச் சேர்ந்து
வாட்டுமுதுமை யடைந்தனையாட்சியை
மைந்தனுக்கியென *நேர்ந்து (கச)

வேட்டைபலித்திடத் தெய்வங்கொண்டானுக்கு
வேண்டும்பலபொருள் கொடுத்து
காட்டுறைதெய்வ மகிழ்ந்திடநற்பலி
காதலானூட்டென விடுத்து (கரு)

நாகனுமைந்தனை நோக்கியென்னையநீ
நான்சொல்லும்வார்த்தையைக் கேளு
ஆகந்தளர்ந்திட்டே•னுதலாலிவ்வர
சாட்சியைநீயேகொண் டாளு (கசு)

என்றுதன்னுட்சியை மைந்தனுக்கீந்தபோ
தியாருமனத்துயர் விண்டார்

* நேர்ந்து-நாகன் உடம்பட்டு.

அன்றுநந்திண்ணப்பி ரான்கன்னிவேட்டைக்
கமைந்ததோர்கோலமுங் கொண்டார் (கஎ)

தெய்வக்குறத்தியும் வந்தையர்நெற்றியிற்
சேடையணிபெற அப்பினுள்
ஐயவுன்றந்தையின் றந்தைக்குமின்றுபோ
லானதிலேயெனச் செப்பினுள் (கஅ)

வேடர்பலரொடு மேகிவனத்தில்
விலங்கினம் யாவையும் மடித்தார்
மூடும்வனவிலங் கால்வருந்துன்ப
முழுமையு நீங்கிட முடித்தார் (ககூ)

---

கீர்த்தனம் - இராகம் - பூரிகல்யாணி - ரூபகதாளம்.

## பல்லவி.

வேட்டையாடினுர் - திண்ணனுர்
வேட்டையாடினுர்

## அநுபல்லவி.

பூட்டும்வில்லம்பு கையிற்பிடித்துக்
காட்டுவிலங்கைக் கலங்கஅடித்து " வேட்டை.

## சரணங்கள்.

க. நெடுமரங்களை முரித்து - வெட்டி
நீண்டவலையை விரித்து
கொடிய வேடர்கள் பார்வை வைத்தொலி
கொடுகூவக் கணையேவிக்
கடுவேகத் தொடுதாவி வேட்டை.

ஏ. 6697



௨. நாய்கள் பற்பல கூடி - அங்கே
நாலுபக்கமும் ஓடி
தீய விலங்கை யெழுப்ப அவையுஞ்
சினமுடனே யெதிர்பாய
வருமுனமே உயிர்மாய வேட்டை.

௩. கரடி மான்புலி சிங்கம் - பன்றி
காட்டு*மேதிமா தங்கம்
உருவக் கடமை முதல் விலங்குகள்
உடல்நெரியக் குடல்சரியத்
தொடைமுரியத் திடர்தெரிய வேட்டை.

---

அப்பொழுதோர்பன்றி தப்பியேயோட
அதனைத்தொடர்ந்துபின் சென்றா
† எய்ப்பிலாநாணனுங் காடனுநீங்காம
லெந்தைக்குதவியா நின்றார் (௨௦)

அய்யரதைக்கொல்ல நாணனுங்காடனு
மப்பனேயித்தைநா முண்ணுவோம்
வெய்யபசியொழித் தேயிளைப்பாறிநம்
வேட்டைவனத்தினை நண்ணுவோம் (௨௧)

என்றலுநன்றுதண் ணீரெங்கிருப்பதென்
றெந்தையுரைப்பஇக் காடும்
சென்றிடிற்பொன்முகி யாறொருகுன்றினைச்
சேரமணிகொழித் தோடும் (௨௨)

என்றுகுறிப்பொடு நாணனுரைத்திட
ஏந்தலதனையுட் கொண்டு

---

* மேதி-எருமை. மாதங்கம்-யானை. † எய்ப்பு-தளர்ச்சி.

சென்றரைக்காதத்தி னிற்றிருக்காளத்தி
சேர்ந்தபூஞ்சோலையைக் கண்டு (உந)

திண்ணப்பிரான் பரவசராகநின்று சொல்லுதல்.

இராகம் - நாதநாமக்கிரியை - ஏகதாளம்.

கண்ணிகள்.

க. என்ன அதிசய மென்னவோதானே
இன்ன அதிசய மென்றறியேனே.

உ. இந்தமலைகாண ஏகுதே துன்பம்
எல்லையில்லாது பெருகுதேயின்பம்.

ந. காந்தமிரும்பைக் கவர்வதுபோலே
காணுமென்னெஞ்சை யிழுக்குதுமேலே.

ச. தலையிலிருந்த ஒருபெரும்பாரம்
தள்ளினதுபோலத தோணுதிந்நேரம்.

ரு. என்னையறியாமல் நெஞ்சினிலன்பு
இசைகிறதென்ன விளையுமோமுன்பு.

நாணனேதோன்று மலையினிலெய்துவோ
நாமெனநல்லது தானே
காணவேசென்றிடி லோநல்லகாட்சியே
காணுவீரயெங்கள்கோ மானே (உச)

பண்டுநின்றந்தையோ டிந்தமலைவந்து
பார்த்திருக்கின்றனை ஞனே
கொண்டவெழிற்குடு மித்தேவரைக்கண்டு
கும்பிடலாகுமென் ருனே (உரு)

அன்னதுகேட்டவர் தேவரிருந்திடும்
அந்தஇடத்துக்கு நேரே
முன்னடவென்று விரைந்துவந்தேபொன்
முகரிக்கரையடைந் தாரே (உசு)

காடனையங்கெரி மூட்டெனவைத்துக்
கடுகியேதிண்ணனார் சென்றார்
ஓடுநதிகடந் தம்மலையின்னடி
யுற்றனர்பாசத்தை வென்றார் (உஎ)

நாணனுமன்புமுன் னேமலையேற
நடந்தெங்களையன்முன் போயினார்
காணுமுன்னேயருள் நோக்கம்பதியக்
கரையுமன்பேஉரு வாயினார் (உஅ)

வானுலவுந்திருக் காளத்திமாமலை
வாழுமமுதினைக் கண்டார்
தானுறுமன்புமுன் றள்ளவேயோடித்
தழுவினராநந்தங் கொண்டார் (உகூ)

சாரும்புளகமுற் றேவிழிநீர்மழைத்
தாரைபோலேமிகப் பொழிந்தார்
ஆருந்துணையின்றி யேயிருக்கின்றீரே
ஐயரேயென்றுள்ள மழிந்தார் (ரு0)

---

கீர்த்தனம் - இராகம் - செஞ்சுருட்டி - ஆதிதாளம்.

## பல்லவி.

தனியேயிருக்கலாமோ - சாமிநீர்
தனியேயிருக்கலாமோ

## அநுபல்லவி.

இனியபொருளில்லாத
ஏழைகள் போலே
இந்த மலையின்மேலே - சாமிநீர் தனி.

## *சரணங்கள்.

க. காட்டுமிருகங்கள்
கூட்டமா வருமே
கடியதுன் பந்தருமே - சாமிநீர் தனி.

உ. மண்டும்பசிவேளையி
லுண்டிட யாரே
மாமிச மிடுவாரே - சாமிநீர் தனி.

ங. பொல்லாதவேடர்க்கே
நல்லதி தாகும்
பொழுதெப் படிப்போகும் - சாமிநீர் தனி.

ச. பெரியமலையில் வாழும்
அரியபொன் மலையே
பேசசுத்து ணையுமிலையே - சாமிநீர தனி.

---

† சீகாளத்திநாதரைத் திண்ணனூர் தம்மூர்க்கு
வருமபடி அழைததல்.

கீர்த்தனம் - இராகம - சங்கராபரணம் - ரூபகதாளம்.

## பல்லவி.

வாரும் குடுமிதேவரே - எம்மூருக்கென்னுடன்
வாரும் குடுமிதேவரே

---

* சரணங்களின் இரண்டாமடிகளை முதல்முறை பாடும்போது 'சாமிநீர்' என்பதைச் 'சாமியுமக்கு' என்றும், மடக்கிப்பாடும்போது 'சாமிநீர' என்றும் சொல்லிக்கொள்க. † அநுபந்தத்தைப்பார்க்க.

சரணங்கள்.

க. மலையிலிலரி முதலியசெயும்
இடருளதது ஒருசிறிதிலை வாரும்.

உ. பசிவருமுன முணாநலதசை
பலவகையுள ஒருகுறைவிலை வாரும்.

ங. இடுதொழிலெது அதைநொடியினில்
இசைவொடுபுரி பவர்பலருளர் வரும்.

---

கண்ணிகள்.

*ஈசர்வராமைகண் டிவ்விடந்தானிவர்க்
கிச்சையுள்ளவிடம் போலும்
நேசரிவரைப் பிரிந்திடிலென்னுயிர்
நிற்பதரிதொருக் காலும் (ஙக)

இப்படிநைந்தவர் பச்சிலைநீரிவர்க்
கிட்டவராரெனும் போது
துப்புடைநாணனு மப்பரைநோக்கியே
சொல்லுவன்கேளுமென் றீது (ஙஉ)

முன்னொருபார்ப்பான்வந் திம்மலைத்தேவர்க்கு
முன்னேகுளிர்ந்தநீ ராட்டினன்
துன்னியபூவு மிலையுங்கொணர்ந்திவர்
தூயமுடியினிற் சூட்டினன். (ஙங)

என்னமோவூட்டிக்கை காட்டிமுணுமுணுத்
திட்டதன்பின்புசென் றனே
அன்னவனேயின்று மிங்கிதுசெய்திருப்
பானெனவேபுகன் றனே (ஙச)

---

* அநுபந்தத்தைப்பார்க்க.

ஐயர்தமக்கிது வேயினிமைச்செய
லாமெனவேகடைப் பிடித்தார்
வெய்யபசிவரு முன்னமுணவிட
வேண்டுமேயென்றுளந் துடித்தார் (௩௫)

போகுவர்மீள்வர் தழுவுவர்மீளவும்
போவரன்பால்நின்று நோக்குவார்
நாகிளங்கன்றைப் பிரியும்பசுவென
நாடிவிழிப்புனல் போக்குவார் (௩௬)

பின்னொருவாறு துணிந்துநடந்து
பெருமலர்ச்சோலையிற் கூட
மன்னியகாடனு மென்னநீர்தாழ்த்த
வகையென நாணனுங் * காட (௩௭)

அங்கிவன்றேவரைக் கண்டுகட்டிக்கொண்
டரியவுடும்பென நின்றான்
இங்குமத்தேவர்க் கிறைச்சிகொண்டேக
இசைந்துதிரும்பின னென்றான் (௩௮)

திண்ணனிதென்னெனுங் காடனைநோக்கிலர்
தீயினிற்பன்றியை வதக்கி
கண்ணுந்தசையைப் பதங்கொளக்காய்ச்சித்தன்
நாவில்வைத்துப்பல்லா லதுக்கி (௩௯)

நல்லசுவையுள்ள மாமிசந்தன்னை
நலம்பெறக் † கல்லையிற் சேர்த்தார்
அல்லதைவீசி யெறிய இருவரும்
ஐயர்தமையுற்றுப் பார்த்தார் (௪0)

---

* காட-காடனே. † கல்லை-தொன்னை.

தெய்வப்பயித்தியங் கொண்டானிவனெனச்
சிந்தையிலெண்ணிட லாயினார்
மையலுறுந்தேவ ராட்டியுநாகனும்
வந்திடிற்போமெனப் போயினார் (சுக)

அண்ணலுமையர்க் கபிஷேகமாட்டிட
ஆற்றுநீர்வாயினில் மொண்டு
தண்ணியபச்சிலை பூவொடுகொய்து
தலைநிறையவைத்துக் கொண்டு (சுஉ)

கல்லையில்வைத்த வமுதும்வில்லம்புங்
கரங்களிற் றாங்கியே நேரே
வல்லைநடந்தெங்க ளையர்திருமுன்பு
வந்தடைந்தார்திண்ண னாரே (சுங)

---

கீர்த்தனம் - இராகம் - பரசு - சாபுதாளம்.

## பல்லவி.

பூசைசெய்தாரே-திண்ணப்பிரான்
பூசைசெய்தாரே

## அநுபல்லவி.

நேசமொடுகாளத்தி மலையெழுமொளியை
நினைப்பவர்க்கினித்திடு நின்மலவெளியை பூசை.

## சரணங்கள்

க. கர்த்தன்முடியிருந்த மலர்களைவெள்ளிக்
கம்பிகட்டுஞ்செருப்புக் காலினாற்றள்ளி பூசை.

உ. வாயிற்கொண்டுவந்த மஞ்சனநீரை
மன்னுமுடியின்மிசை யுமிழ்ந்தரனாரை பூசை.

ங. தலையிற்செருகிவந்த பச்சிலைபூவை
தாழ்ந்துமுடியிற்சாத்தி யேயெங்கள்கோவை பூசை.

ச. சங்கற்பமொன்றினை யுங்குறியாமல்
சங்கரன்பூசையி தென்றறியாமல் பூசை.

---

கண்ணி.

இவ்வகைசெய்துபின் ஊனமுதத்தை
யெதிரிலிட்டேயைய நீரே
ஒவ்வுஞ்சுவைகொளு நல்லஇறைச்சியி
துண்ணுமெனவுரைத் தாரே (சச)

---

கீர்த்தனம் - இராகம் - சௌராஷ்டிரம் - மிசிரசாபுதாளம்.

பல்லவி.

உண்ணுமையா - உண்ணுமையா.

அநுபல்லவி.

வண்ணமலை மேலேரிதம்
வாழ்மணியே ஊனமுதம் உண்.

சரணங்கள்.

க. கொழுத்ததசை யாய்த்தெரிந்து
கூரம்பினு லேயரிந்து
பழுத்ததீயிற் பதமாக
பண்ணினது பசிபோக உண்.

உ. பரிவுடன்வா யினிற்சேர்த்து
பல்லினலை துக்கிப்பார்த்து
அரியசுவை முன்னுணர்ந்தேன்
ஆனதையே நான்கொணர்ந்தேன் உண்.

௩. பசிபொறுக்க மாட்டீரென்று
பதைத்திதுகொ ணர்ந்தேனின்று
இசையுநல்ல தாகநாளை
இடுகிறேனி தையிவ்வேளை உண்.

கண்ணிகள்.

இன்னமொழிசொல்லி யூட்டியஅன்ப
ரிருள்வரவையரைச் சேர்ந்து
துன்னும்விலங்கு வருமெனக்காத்தனர்
தூக்கம்விடுத்தன்பு கூர்ந்து (௪௫)

செய்யகதிர்வரு முன்னமிறைச்சிக்குத்
திண்ணனார்காட்டிற்பு குந்தார்
ஐயனைப்பூசித்தி டுஞ்சிவகோசரி
யாருநெறியொடு வந்தார் (௪௬)

வெந்ததசையு மெலும்புங்கண்டையோ
விதிவசமேயென வோடினார்
இந்தஅநுசிதம் வேடரிழைத்ததென்
றேங்கியழுதுளம் வாடினார் (௪௭)

கீர்த்தனம்-இராகம்-புன்னாகவராளி-சாபுதாளம்.

பல்லவி.

ஐயோநா னென்செய்வேனே - மிக
அநியாய மிதுதானே.

அநுபல்லவி

வையம்புகழ்காளத்தி மலைமிசையுறைநாதா
துய்யநின்றிருமுன்னே தோன்றக்காண்பதுமீதா ஐயோ.

## சரணங்கள்.

க. வெந்தமிருக ஷூனும் - அதனுடனே
மேவுமெலும்பு தானும்
இந்துசேகரனை எம்பெருமான்முனம்
சிந்திக்கிடக்கக்கண்டு தியங்குகிறதேமனம் ஐயோ.

உ. காலிற்செருப்பி னோடும் - மிகவுறுமிக்
கடிக்குநாயி னோடும்
ஆலமுண்டருளிய ஐயன்முன்வரலாமோ
ஏலவிதற்குமீச ரிசைந்திருந்திடப்போமோ ஐயோ.

ந. கருணையென்பதைப் பிரிந்து - களவுடனே
கடியகொலைகள் புரிந்து
திரியும்வேடருணவு தின்பதற்கிடமாச்சே
அரியசிவசந்நிதிப் பெருமைபிப்படிப்போச்சே ஐயோ.

---

### கண்ணி

சுத்திபுரிந்து திரும்பவும்பொன்முகித்
தூயநதிப்புன லாடினர்
பத்தியொடும்பர மேசனைப்பூசித்துப்
பண்ணொடுதோத்திரம் பாடினர் (சஅ)

---

இராகம் - தோடி - ரூபகதாளம்.

### கண்ணிகள்.

க. சிவசிவமஹா தேவசங்கர
தெக்ஷிணகயி லாசனே
தவமுனிவர ரிமையவர்நிதந
தாள்பணிந்திடு மீசனே.

உ. அயனுமாலுந் தேடிக்காண
அரியஞானசொ ரூபனே
துயருஞ்சனன மரணவேதை
தொலைத்திடும்பிர தாபனே.

ங. *சிலந்தியரவம் யானைபூசனை
செய்யமகிழ்ந்த நாதனே
கலந்தஅன்பறி யாதபாவியர்
காணற்கரிய பாதனே.

ச. துரியப்பொருளி தென்னவேதந்
துதித்திடும்பரஞ் சோதியே
எரியும்விஷமுண் டமரருக்குயி
ரீந்தகருணை யாதியே.

ரு. அன்னைஞானப்பூங் கோதைக்கினிமை
யளித்திடுமெழி லாகனே
பன்னுமெனது பூசையுங்கொண்டு
பலனளித்திடுந் த்யாகனே.

---

கண்ணிகள்.

உள்ளங்கசிந்துகண் ணீர்பெருகத்துதி
யோதியமாமறை வாயினர்
வள்ளல்மலரடி காழ்ந்துவிடைகொண்டு
வாழும்வனந்தனிற் போயினர் (சுகூ)

வேடர்பிரான்பல வூனமுந்தம்புனல்
வேரிமலரொடு மாசை

* சிலந்தி, பாம்பு, யானை, இம்மூன்றும் பூசித்தகாரணத்தால் "சீகாளத்தி" எனத்தலப்பெயராயிற்று. (சீ-சிலந்தி, காளம்-பாம்பு, அத்தி-யானை.)

K. CHIDAMBARANATHA MUDALIAR, 23 JUN 1914

நீடவடைந்து முனிவரரிட்டதை
நீக்கிமுடித்தனர் பூசை (ரு0)

---

## இரண்டாநாள்

திண்ணனார் சீகாளத்தி நாதருக்கு ஊனமுது
உபசரித்து ஊட்டல்.

கீர்த்தனம் - இராகம் - சங்கராபரணம் - சாபுதாளம்.

### பல்லவி.

அமுதுசெய்தருளுமையா - இந்தவூனை
அமுதுசெய்தருளுமையா

### அநுபல்லவி.

சமையப் பதஞ்செய்துநான்
தக்கபடி கொணர்ந்தேன் (அமு)

### சரணங்கள்

க. நேற்றுப்படைத்ததிலு நிச்சயமாயிது
ஏற்றமுடையருசி யிசைந்ததாயிருக்குது (அமு)

உ. பன்றிமரைகடமை பலவாமிருகங்கொன்று
துன்றுமிறைச்சிவகை சுகமாயமைத்தேனின்று (அமு)

ந. தேனுமொக்கக்கலந்து , தித்திக்குமிதுதானே
நானுங்கண்டேன்சுவை நயந்தேயெம்பெருமானே (அமு)

ச. பட்டஇடமணக்கும் பார்த்தகண்ணுமணக்கும்,
தொட்டகையுமணக்கும் சொல்லுநாவுமணக்கும் (அமு)

---

## கண்ணிகள்.

நாடும்பகலினி லூணமுதூட்டுதல்
நாடியேவேட்டை நடத்துவார்
நீடுந்துயிலின்றி யப்பர்திருமுன்பு
நின்றேயிரவைக் கடத்துவார் (ரு௧)

ஐயரிருந்திட நாகன்பெருந்தேவ
ராட்டியொடுமங்கே யடுத்து
செய்குவதொன்றுமில் லாமலேயூருக்குச்
சென்றனனுசையை விடுத்து (ரு௨)

தன்முறையின்படி வேடர்சிகாமணி
சாமிக்குப்பூசனை செய்வார்
அன்னதைநீக்கிவிட் டேசிவகோசரி
யாரருச்சித்துள்ள நைவார் (ரு௩)

வேதமுநிவரைந் தாவதுநாளினில்
வித்தகன்பூசனை முடித்து
நீதனேயிந்தஅ நீதமுறுமலே
நீக்குமென்றார்கண்ணீர் வடித்து (ரு௪)

---

கீர்த்தனம் - இராகம் - தன்னியாசி - ரூபகதாளம்.

## பல்லவி.

இந்தத்தீமை தீர்க்கவேணுமே - மஹாதேவா
இந்தத்தீமை தீர்க்கவேணுமே

## அநுபல்லவி.

இந்தத்திமை தீர்க்கவேணும்
என்கவலை போக்கவேணும்
கந்தஜநக சந்த்ரசேகரா கருணைகரா இந்த.

## சரணங்கள்.

க. இஷ்டமாயிங் கிதைச்செய்ய
இசைந்தவனைக் காணேனய்ய
துஷ்டநிக்ரக சிஷ்டரக்ஷண விஷபக்ஷண இந்த.

உ. நீயவர்க்கு டனேபலம்
சேரக்காட்டு வதேநலம்
தூயவாகம வேதகாரண பரிபூரண இந்த.

௩. இன்னமுந டந்தாலீது
யான்பொறுக்க முடியாது
சொர்ன்னமுகரி தீரவாசனே ஜகதீசனே இந்த.

---

## கண்ணி.

அற்றைமிரவில் முநிவர் துயிலும்போ
தங்கெழுந்தேவிடை யேறுவார்
மற்றவன்றன்னிலை கேளெனவேதிரு
வாய்மலர்ந்தன்பொடு கூறுவார் (௫௫)

---

கீர்த்தனம் - இராகம் - சுருட்டி - சாபுதாளம்.

## பல்லவி.

என்னசொல் லுவேனுனே - அன்பன்
இயல்பையு மக்குத்தானே

## அநுபல்லவி.

நின்னயமாகவே என்னைப்பூசித்துவரும்
நேசரானசிவ கோசரியாரே (என்ன)

## சரணங்கள்.

க. இங்குவந்தவனென்னைப் பூசிப்பதற்குமுன்னே
யிசைந்த எனதுமுடி யின்மீது - *முனம்
தங்கியயலர்களைக் காலிற்செருப்பினாலே
தள்ளிககழித்திடுவா னப்போது - எந்தன்
அங்கமுழுதங்குளிர்ந் தெங்கும்புளகம்பூணும்
அரியகுழந்தையடிப் பரிசம்போலவேதோணும் (என்ன)

உ. †ஆசைவெள்ளம்பொங்கி வழிந்ததுபோல்வாயில்
அள்ளிவந்தபுன லைத்தானே - தன்
மீசைவழியேகங்கை வாசம்புரியுமுடி
மேலேயொழுகவுமிழ்ந் திடுவானே - அது
மாசிலாதமந்த்ர வோசையுடனேயாட்டும்
மஞ்சனத்தருப்பைநீர்க் கஞ்சுபங்காகக்காட்டும் (என்ன)

ங. செரும்புழுக்கடித்து மடங்கியுலர்ந்துமேலே
சிலம்பிக்கூடுகட்டி மிகவாடி - பிறர்
*ஆருந்தொடாதபல மலரும்பச்சிலையுந்தான்
அணிந்துவந்தெனக்குவைப் பான்சூடி - அவை
சாருநன்மலரினுஞ் சேரப்பரிமளிக்கும்
*சண்டீசனுக்குமேலா மண்டுமின்பமளிக்கும் (என்ன)

ச. கானகந்தனிலுள்ள மான்முதலியமிரு
கங்களினிறைச்சியைப் பதமாக்கி - முன்னே
தானதன்சுவைகண்டு தேனுமுடன்கலந்து
தந்திடுவான்மென்று குறைநீக்கி - ஐய

---

* இவற்றையநுபந்தத்திற்பார்க்க.

† ஆசைவெள்ளம் பொங்கி வழிந்ததுபோல் (வாயிலளளிவந்த புனலைத) ஒழுகவுமிழ்ந்திடுவானே எனக்கூட்டுக.

நானந்தத்தசைகாண ஆநந்தமிகவாச்சு
நல்லவேள்வியவி செல்லாம்வெறுத்துப்போச்சு (என்ன)

ரு. இனியசுரத்துடனே முனிவரொடமரர்
இசைக்கும்வேததோத் திரவோசை - யிவன்
கனிவொடெனைக்குறித்துப் புனையுமொழிகேட்டபின்
காதினிற்கேட்கவே யிலையாசை - இள
வனிதையர்மொழிவிடக் கினிமைவிளைக்கவரும்
வகையினுமதிகமா அகமகிழ்ச்சியைத்தரும் (என்ன)

---

கண்ணிகள்.

கோயிலவன்மனஞ் சீலமவன்செயல்
கூறுமவனுரை வேதம்
நேயமவனூறு வேடனவனென
நீநினையாதே.அ நீதம் (ருசு)

அன்பனீராவன் தங்கேயொளித்திருந்
தாலவன்றன்னிலை தானே
முன்பறிவாயுன் கவலைவிடென்று
மொழிந்தெழுந்தாருமை கோனே (ருஎ)

---

சொப்பனங்கண்டசிவகோசரியார்
திண்ணனூர்பெருமையறியாமைக்கிரங்கல்.

---

கீர்த்தனம் - இராகம் - உசேனி - சாபுதாளம்.

பல்லவி.

என்னகாரியம்பண்ணினேன் - ஐயையோநான்
என்னகாரியம்எண்ணினேன்

## அநுபல்லவி.

மன்னுமன்பரைஉமை மாதிடம்பிரியாமல்
வைத்தஎங்கள்பரம னடியரென்றறியாமல் (என்)

## சரணங்கள்.

க. உயர்ந்தபொருள்கள் சிறந்து - விளங்கும்வேதம்
உரைத்ததிருவாய் திறந்து
நயந்துபரமன்புகழ் நல்லடியரைத்தானே
நாடியுணர்ந்திடாமல் நான்பிழையுரைத்தேனே (என)

உ. அன்பேமுக்கிய காரணம் - அதனுற்செய்யும்
அரியபூசையே பூரணம்
வன்பாலன்பருயிரை மடிக்கவுந்துணிந்தேனே
மற்றுமொறுக்கவேண்டி வரதனைப்பணிந்தேனே (என்)

ந. *செங்கதிர் முன்னின்றாலும் - அதன்கிரணம்
சேர்ந்தமணலிற் காலும்
தங்கவைப்பரிதுபோல் சங்கரனுக்குநேரே
தானின்றாலுமடியார் தமக்கெதிர்நிற்பார்யாரே (என்)

---

### கண்ணிகள்.

சிலமுனிவரிவ் வாறுவருந்தித்
திகைத்துப்பின்கண்துயில் பொருந்தார்
காலையிற்சென்றுமுன் போலஅருச்சித்துக்
கண்ணுதல்பின்னெளித் திருந்தார் (நிஅ)

முன்னமேசென்றுநல் வேட்டைமுடித்து
முறைப்படிபூசனைக் கூனும்

* அநுபந்தத்தைப்பார்க்க.

மன்னும்புனலு மலரொடுகொண்டு
வருகின்ற வேடர்பி ரானும் (௫௯)

தீயசகுனங்கள் கண்டுகெட்டேனிவை
செய்திடுமேபெருந் தீது
ஆயநம்மத்தற் கடுத்ததென்னோவென
அஞ்சிமெலிந்தாரப் போது (௬0)

---

கீர்த்தனம் - இராகம் - கமாசு - திரிபுடைதாளம்.

## பல்லவி.

என்ன நேர்ந்த தோவறியேன்
ஏது நேர்ந்த தோவறியேன்

## அநுபல்லவி.

தன்னந் தனி யேயிருந்த
சாமி யார்மி கவருந்த என்ன.

## சரணங்கள்.

க. காடைவலி யன்க ருடன்
கழுகொடுகூ கையுந் தானே
நாடிவல மாகிச் செல்ல
நானிந்நேரங் காண்கி றேனே என்ன.

உ. காகநரை யான்செம் போத்து
காணுமுயில் கிள்ளை கொக்கு
வேகமாயி டமா குதே
மேவியநந் தேவ ருக்கு என்ன.

௩. மொய்த்தஇச்ச குன மெல்லா
முறைமுறைசெய் வது திங்கே

இத்தனைக்கு திரங் காட்டும்
என்னுயிரா மப்பர்க் காங்கே என்ன.

---

கண்ணிகள்.

வேகமாய்வந்திடும் போதவ்ரன்பை
விமலன்முநிவர்க்கு நேரே
வர்கொடுகொட்டவோர் கண்ணிலுதிரம்
வழிந்திடக்கொண்டிருந் தாரே (சுக)

தூரவரும்பொழு தேயது கண்டுநந்
தோன்றலுமோடியே வந்தார்
சோருங்குருதிநீர் கண்டுமெயங்கித்
துடித்துநிலத்தில்வி ழுந்தார் (சுஉ)

---

கீர்த்தனம் - இராகம் - பந்துவராளி - ஆதிதாளம்.

## பல்லவி.

என்செய்வேன் - இதற்குநான்
என்செய்வேன்

## அநுபல்லவி.

தஞ்சமாகஎனக் கிங்கிருந்தாருக்குச்
சடிதியிலேபெரும் இடர்வந்துநேர்ந்ததே என்.

## சரணங்கள்.

க. போகையிலேசுக மாகவிருந்தவருக்
கோகோ! இவ்வகை யாகியதேயினி என்.

உ. வையந்தனிலெனக்கு நொய்தினிற்கிடைத்தவர்க்
கையோ! இப்படி எய்தியதேதுயர் என்.

௩. செப்புமுறுப்புகளில் நுட்பமாகுங்கண்ணில்
அப்பா ! மிகுகுரு திப்புனலொழுகுதே என்.

௪. பெருகியொழுகிவரும் குருதிகாணஎந்தன்
அரசே யெனதுள்ள முருகித்தவிக்குதே என்.

௫. இப்புவியிலெவரு மொப்பிலாதஎங்கள்
அப்பனே யுனக்கி தெப்படிநோகுதோ என்

———:*:———

கண்ணிகள்.

ஓடிவர்மீள்வர் விழுவர்நிலத்தை
யுழுவருருளுவ ரேங்குவார்
வாடியுடலந்தள் ளாடிமயங்கி
மனமழிந்தேயுரை நீங்குவார் (௩௩)

பின்னரெழுந்து துடைத்தனர்சோரி
பெருகிடமீளவும் வாடினார்
என்னிதுசெய்தவ ராரெனவெண்ணி
எழுந்துவிற்கொண்டெங்குந் தேடினார் (௩௪)

தேடியுமொன்றுங்கா ணாதுவிரைந்து
திரும்பியரனிடம் வந்து
நாடிமலரடி தன்னில்விழுந்து
நடுங்கிக்கதறினார் நைந்து (௩௫)

———

கீர்த்தனம் - இராகம் - எதுகுலகாம்போதி - ஆதிதாளம்.

பல்லவி.

அப்பனேஐயனே யெப்படியிதுவந்த
தறியேனறியேனே

### அநுபல்லவி.

இப்படியும்வருமோ என்னமாயமோ இது
செப்புவாருமில்லை சிந்தைநொந்தழிகுது அப்பனே.

### சரணங்கள்.

௧. காட்டிலே திரியுமான்
கோட்டாற் குத்தி விட்டதோ
கரடிபு லிதான்நகம்
உருவும்படி தொட்டதோ
வேட்டையா டுவோரம்பை
யோட்ட அது பட்டதோ
வேறெந்த வகையாலிவ்
வாறு விளைந் திட்டதோ அப்பனே.

௨. இந்த நாட்டுவேடர்
வந்து விளைத்த தீதோ
எண்ணியே அயல்நாட்டார்
நண்ணிப்பு ரிந்த வாதோ
அந்த நாகன்மன
நொந்து செய்த சூதோ
அறியாப்பா லியைக்கண்ட
குறையால்வந் தது மீதோ அப்பனே.

௩. கொடிய செய்கையிலே
படியுந் தீய வன்பி
கொண்டவ ருக்குமுனைக்
கண்டனைந் திடு முன்பு
கடிய மனமுருகி
மடியவ ருமே அன்பு

கண்ணி லிதுசெய்யவு
மெண்ணு வாரோ பின்பு அப்பனே.

௪. உகந்து வரும்வழியிற்
றகைந்து பறவை யினம்
உதிரக் குறிகாட்டியே
எதிரே வந்தச குனம்
புகுந்து பலித்ததிது
மிகுந்து வருத்து முனம்
போக்கவென் னுயிரெனிற்
கேட்கவில் லையே மனம் அப்பனே.

---

கண்ணிகள்.

என்னசெய்தாலிது தீர்ந்திடுமென்னவே
யெந்தையார்சிந்தித்துப் பார்த்தார்
மன்னியபச்சிலை கொண்டுபிழிந்தெங்கள்
வள்ளலார்கண்ணினில் வார்த்தார் (௬௬)

பின்னுமுதிரம் விடாதுபெருகப்
பெருந்தகையாரது கண்டார்
என்னிதுதீர்ந்திடக் கண்டிலமேயென
ஏங்கிப்பெருந்துயர் கொண்டார் (௬௭)

---

கீர்த்தனம் - இராகம் - சாமா - ரூபகதாளம்.

பல்லவி.

ஏதுசெய்வேன் - ஐயையோநான்
என்னசெய்வேன் - இதனைத்தீர்க்க

## அநுபல்லவி.

ஆதரவா யெனக்குக்கிடைத்த
ஐயன்கண்ணிற்புண் ஆறவில்லையே ஏது.

## சரணங்கள்.

க. மனமகிழப் பெற்றெடுத்து
வளர்த்தவர் தங் களைவிடுத்து,
இனியரிவ ரெனத்தானே,
எண்ணியேநா னிருந்தேனே ஏது.

உ. துரும்புபட்டா லும்பொரிதே
துன்பமதைப் பொறுக்கரிதே
பெரும்புணிது மிகநோமே
பின்னே அசாத் தியமாமே ஏது.

ங. இலைபிழிந்து வார்த்தேனே
இயன்றமட்டும் பார்த்தேனே
நலமதொன்று மதனாலே
நண்ணிலையே யினிமேலே ஏது.

---

### கண்ணிகள்.

வானவர்தம்பெரு மானுறுநோயெந்த
வாறொழிவாமெனச் சோர்ந்தார்
ஊனிலுறுந்துய ரந்தனைநீக்குவ
தாறெனவுழு துரை தேர்ந்தார் (சூஅ)

என்றொருகண்ணையம் பாலேபறித்தெடுத்
தெங்களையன்கண்ணுக் கீடு
துன்னப்பதித்திடிற் றீரவுமாமெனச்
சூழ்ந்துசெய்வார் துணி வோடு (சூகூ)

## திண்ணப்பிரான்கண்பறித்துச்சாத்தல்.

இராகம் - சுருட்டி - மிசிரசாபுதாளம்.

### கண்ணிகள்.

க. திண்ணப்பிரானந்தி வண்ணப்பிரானெதிர்
சேர்ந்து - மகிழ் - கூர்ந்து
செய்யசரத்தினைக் கையகந்தன்னிலே
கொண்டு - பயம் - விண்டு.

உ. தன்னொருகண்ணினிற் பின்னமுறுமலே
விடுத்துக் - கணை - தொடுத்து
சங்கரன்செம்புனல் பொங்கும்வலக்கண்ணிற்
சேர்த்தார் - உற்றுப் - பார்த்தார்.

௩. வழிந்தகுருதி யொழிந்திடக்கண்டனர்
தூயர் - சிவ - நேயர்
வானிலெழுந்துதன் மேனிமறந்துமுன்
தாவினர் - மிகக் - கூவினர்.

௪. நன்றுசெய்தேன்செய்தே னென்றுபுகன்று
துதித்தார் - தன்னை - மதித்தார்
நல்லதன்கண்ணிலொன் றில்லையேயென்பதை
நினையார் - பழி - புனையார்.

௫. உந்துங்களிப்புறு சிந்தையுடனேநின்
றாடினர் - சுற்றி - ஓடினர்
ஓங்குமலேயென வீங்கும்புஜங்கொட்டி
நின்றார் - வினை - வென்றார்.

## திண்ணப்பிரான் மருந்தைப்புகழ்தல்.

---

கீர்த்தனம் - இராகம் - ஆரபி - ஆதிதாளம்.

### பல்லவி.

*நல்லமருந்துகண்டேன் - நானே
நல்லமருந்துகண்டேன்

### அநுபல்லவி.

எல்லாமருந்தையும் பார்க்குமொருமருந்து
எங்கள்தேவர்புண்ணைத் தீர்க்கும்பெருமருந்து நல்ல.

### சரணங்கள்.

க. இதுவரையுமொருவர் காணுவருமருந்து
இசைந்ததனக்குத்தானே தோணுவொருமருந்து நல்ல.

உ. நல்லவழியினிலே செல்லவிடுமருந்து
நாடுமெவரிடத்து மேவியிடுமருந்து நல்ல.

ந. இருளுக்கிருளாயொளிக் கொளியாயுள்ளமருந்து
என்னைப்பிரிந்தென்னுயி ரீந்தகள்ளமருந்து நல்ல.

---

### கண்ணிகள்.

பின்னையுமன்பர் நலத்தினைக்காட்டப்
பிறைமதிசூடிய ஈசர்
தன்னிடக்கண்ணிலும் புண்ணீர்விடுத்திடத்
தானதுகண்டனர் நேசர் (எ0)

*வெய்யநரகில் நெடும்பகலுற்றபின்
மேயசுவர்க்கத்துட் புகுந்தார்

---

* அநுபந்தத்தைப்பார்க்க.

*ஓய்யெனமீள நரகில்விழுந்ததை
யொத்துமனத்துயர் மிகுந்தார் (எக)

கீர்த்தனம் - இராகம் - அமீர்கல்யாணி - சாபுதாளம்.

பல்லவி.

இந்தவினைக்கென்ன செய்வேன்
எந்தவிதத்தினி லேழையேனுய்வேன்

அநுபல்லவி.

எந்தனையருக்குமுன் வந்தசங்கடமே
ஏகாமவிப்படிச் செய்வதேயடமே இந்த.

சரணங்கள்.

க. வந்தொழிந்ததென மகிழ்ந்தேனேநெஞ்சம்
எந்தவழியோபின்னும் இசைந்ததேவஞ்சம் இந்த.

௨. அந்தக்கண்ணேய்வழி யடைத்ததனாலே
இந்தக்கண்வழியாக எழுந்ததோமேலே இந்த.

௩. மண்டுங்குருதிகண்டு மயங்குதேயாவி
எண்டிசையிலுமுண்டோ என்னைப்போல்பாவி இந்த.

௪. தீயவேளையிலிங்கே சேர்ந்ததனன்போலும்
போயினதுந்திரும்பிப் புகுந்ததேமேலும் இந்த.

கண்ணி.

சஞ்சலமிஞ்சிய திண்ணப்பிரானும்
தமக்குட்சிறிதுள்ளந் தேறி
கொஞ்சமுநெஞ்சினி லஞ்சிடேனென்று
கூறலுற்றார் துயர் மாறி (எ௨)

* ஓய்யென - விரைவுக்குறிப்பு.

கீர்த்தனம் - இராகம் - அடாணு - ஆதிதாளம்.

## பல்லவி.

அஞ்சுவனோ இனிநான் - இதனுக்காக
அஞ்சுவனோ இனிநான்

## அநுபல்லவி.

வஞ்சமாகஇன்னும் மிஞ்சியேவந்தாலும்
கொஞ்சமாகிலுமென் நெஞ்சுகலங்கியே அஞ்சு.

## சரணங்கள்.

க. பண்டுவந்தபொழுதி லண்டிடாமற்செய்யக்
கொண்டதாகியகை கண்டமருந்திருக்க அஞ்சு.

உ. இருந்தவிடந்தனிலே வருந்திடாமற்கொள்ள
மருந்துசுலபமாகப் பொருந்தியிருந்திடவும் அஞ்சு.

௩. கூர்த்தஅம்பினாலே போர்த்துமற்றொருகண்ணும்
தீர்த்தன்விழியிலப்பித் தீர்த்திதோவிடுகிறேன் அஞ்சு.

---

திண்ணனார் மற்றொருகண்ணும்பறிக்கத்தொடங்குதல்.

---

கீர்த்தனம் - இராகம் - செஞ்சுருட்டி - ரூபகதாளம்.

## பல்லவி.

மற்றொருகண்ணும் பேர்த்துச்சாத்த
மன்னர்தொடங்கினாரே.

## அநுபல்லவி.

உற்றதைமுன்னம் ஊனேக்கொண்டே
முற்றும்போக்கிய முறைமைகண்டே மற்று.

சரணங்கள்.

க. இருக்குமொன்றையும் பறித்திடிலினி
இரண்டுகண்ணுமில் லாமல்
தரைக்குளெப்படிச் சரிக்கலாமெனச்
சற்றுஞ் சிந்தனை யுற்றி டாமல் மற்று.

உ. *முன்னுமசுரன் றன்னைமுடிக்க
வருத்த ஆழி பெறவே
தன்னொருகண்ணை முன்னம்பறித்துச்
சாத்து மாயனு நாண முறவே மற்று.

௩. அப்பும்போதிடந் தப்பிடாமல்
அறிய வேணு மென்றே
எய்ப்பிலாதென் னப்பர்கண்ணில்
இடது காலை யூன்றி நின்றே மற்று.

---

கண்ணி.

வைக்குங்குறிக்கிடக் காலினைநாதர்
மலர்க்கண்ணிலூன்றிய நேசர்
தைத்திடுங்கோலினைக் கண்ணிலேநாட்டத்
தரித்திலர்காளத்தி வாசர் (௭௩)

---

* சிவபெருமான்அடியவர் துன்பம்பொறாரெனல்.

---

கீர்த்தனம் - இராகம் - நாதநாமக்கிரியை - ஆதிதாளம்.

பல்லவி.

தரிப்பாரோ தரிப்பாரோ - ஒருகூஷணமாகிலுமினி
தரிப்பாரோ தரிப்பாரோ

---

* அநுபந்தத்தைப்பார்க்க.

## அநுபல்லவி.

விருப்பும்வெறுப்புமடை  யாததம்மடியார்
மெலிவுறுதருளு  நதிமதிமுடியார்  தரி.

## சரணங்கள்

க. போற்றிப்பூசனைக  ளாற்றியபாலனை
ஏற்றுவந்தகொடுங்  கூற்றனையுதைத்தவர்  தரி.

உ. *கலைதனையொலித்திடுஞ்  சிலையினிலேதமது
தலையைமோதுமன்பர்  நிலைதரியாதவர்  தரி.

௩. †வாட்டமடைந்ததொண்டர் •ஊட்டியரியவாளைப்
பூட்டும்பொழுதினிற்கை  நீட்டித்தடுத்தவையர்  தரி.

௪. அன்பரியல்பையுல  கின்புறவுணர்த்தவே
முன்புபொறுத்தவையர்  பின்புமவர்துயரைத்  தரி.

௫. பூதலத்தோரன்பர் மீதுகுறையொன்றுஞ்சொல்
லாதுபொறுத்தஎங்கள்  நாதனுரினிமேலும்  தரி.

௬. சரமொடசரமெனப்  பரவுமுயிர்மேல்வைத்த
கருணையேதமது  திருவுருவானவர்  தரி.

---

## கண்ணி.

‡ சொல்லறிகங்கணக்  கையினைநீட்டிநந்
தோன்றல்கரங்களைத்  தடுத்தார்
நில்லுகண்ணப்ப எனுந்திருவாக்குக்கை
நீட்டுமுன்மும்முறை  கொடுத்தார் (எச)

---

* திருக்குறிப்புத்தொண்டநாயனுர். கலைதனையொலித்திடுஞ் சிலை - வஸ்திரந்தோய்க்குங்கல். † அரிவாட்டாயநாயனுர். • ஊட்டி - மிடறு. ‡ சொல்லறிகங்கணம் - ஆதிசேஷகங்கணம்.

கீர்த்தனம் - இராகம் - பூரிகல்யாணி - ரூபகதாளம்.

## பல்லவி.

* நில்லு கண்ணப்பா - நில்லு - நில்லு

## அநுபல்லவி.

நல்லகண்ணைப் பறித்திடாதே
நமக்குமனத்திற் றுயர்கொடாதே நில்லு.

## சரணங்கள்.

க. புண்ணிருந்ததும் அண்ணலேயினிப்
போச்சு போச்சு போச்சு போச்சு நில்லு.

உ. புண்ணியாவொரு கண்ணைத்தீர்த்ததே
போதும்போதும் போதும்போதும் நில்லு.

௩. சொஸ்தமானதை யெத்தானேக்குவாய்
சொல்லு சொல்லு சொல்லு சொல்லு நில்லு.

௪. இதையும்போர்த்திடி லுதவியாரெனக்
கெண்ணு எண்ணு எண்ணு எண்ணு நில்லு.

---

## கண்ணிகள்.

திண்ணப்பிரானன்று கண்ணப்பரென்று
சிறக்குந்திருப்பெயர் பெற்றார்
விண்ணப்பிராமதி வேணியனார்வலம்
மேவிச்சிவாநந்த முற்றார் (எடு)

தொண்டரியல்பை மறைந்தஞ்சிநின்றஅத்
தூயமுநிவரும் பார்த்தார்

---

* அநுபந்தத்தைப்பார்க்க.

கண்டவரிபிர மாதியரார்ப்பொடு
கற்பகமாமலர் தூர்த்தார் (௭௬)

வாழிசிவாகமம் வாழிமுதுமறை
வாழிசிவநிலத் தேவர்
வாழிசமய குரவருமாபதி
வாழியறுபத்து மூவர். (௭௭)

———:*:———

கண்ணப்பசுவாமிகள்

சரித்திரக்கீர்த்தனம்

முற்றிற்று.

ஆக - விருத்தம் - ௧. கீர்த்தனம் - ௨௨. கண்ணிகள் - ௩. தனிக்கண்ணிகள் - ௭௭.

அருண்மொழித்தேவர் திருவடிவாழ்க.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அநுபந்தம்

## பக்கம் - கச.

"சீகாளத்திநாதரைத்திண்ணனார் தம்மூர்க்குவரும்படி அழைத்தல்."

இவ்வாறு, சீகாளத்திபுராணம் கண்ணப்பசருக்கத்தில், "சாமி நீதனியேயீண்டுத் தங்குதல் சகிக்கலாற்றேன் - எமநல்லுடுப்பூர்க்கின்னே யென்னொடுமே வருதல் வேண்டுமே" என்று கூறப்பட்டிருக்கிறது. இப்படியழைத்தாரென்பது, கேட்போர்க்கு ஒருவகை யின்பம் விளைப்பதால் இங்கே தழுவிச் சொல்லப்பட்டது. கீழ் வருவதும் இப்படியே.

## பக்கம் - கரு.

"ஈசர் வராமைகண்டு . . . . . காலும்."

மேற்சொல்லிய சருக்கத்தில் "மறுமொழி யிறைவனொன்றும் வழங்கலனிருப்ப மீளி - யிறைதிருவுளத்தெண்ண மிவ்வயினிருத்தல்போலும் - சிறியனேனினியித்தெய்வசிகாமணி தன்னை நீங்கி - யுறுவனோ வுயிரினோடென் றுரைத்தனனின்றாங்கே" என்பதனாற் காண்க.

## பக்கம் - உரு.

"முனந்தங்கியமலர்களை"

சிவபெருமான் சிவகோசரியாரிடத்து, "நீசாத்திய மலர்களைக் காற்செருப்பினாலே தள்ளுவான்" என்று கூறியருளினால், ஒருவாறு நிந்தைபோலத்தோன்றுதலின், அவ்வாறு கூறாது முனந்தங்கியமலர்களை யென்றருளிச்செய்தனர்.

"ஆருந்தொடாதப்பலமலரும் பச்சிலையும்."

இது, யாவருங்கொள்ள விரும்பாத மலரும் பச்சிலையுமென்று

பொருள் படுவதன்றி, ஒருவர்தொட்டதை நமதன்பன் ஆசாரப்பழு தென்று தொடமாட்டானென்று கூறுவதுபோலத் தொனிப்பதுங் காண்க. பல என்பதைப்பச்சிலைக்குங்கூட்டுக.

"சண்டீசனுக்குமேலாமண்டுமின்பமளிக்கும்"

சண்டீசன் நாமணிந்ததைத்தானணியுமுரிமை பூண்டானாதலால், நமதன்பன் சாத்திய பத்திரபுட்பங்கள் சண்டீசனுக்குக்கழிபெரு மகிழ்ச்சி தருவனவாயின. இவ்வாக்கியத்துக்கு இவ்வாறன்றி, சண்டீ சனுக்கும் மேலாமண்டும் இன்பம் (எமக்கு) அளிக்குமென்று கொண்டு, நாமணிந்ததைத்தானணியுங்கால் சண்டீசனுக்கு எத்துணைப் பெருமகிழ்ச்சி யுளதாமோ, அதினுமதிகமகிழ்ச்சி யெமக்குண்டாகின் றது : நமது அன்பன் தானணிந்ததை நாமணியப்பெறுதலால், என் றும்பொருள்படுதல்காண்க. பின்னையது நின்மாலியப்பெருமையும், அதனைப்பெறுங்காற் சண்டீசர் திருவுள்ள நிலைமையும் விளக்கிய வாறு.

## பக்கம் - உஎ.

"செங்கதிர்முன்னின்றாலும்"

இச்சரணக்கருத்தை "ஈசனெதிர் நின்றாலு மீசனருள் பெற் றுயர்ந்த - நேசரெதிர் நிற்ப தரிதாமால் - தேசுபெறு - செங்கதிர்முன் னின்றாலுஞ் செங்கதிர வன்கிரணந் - தங்குமணல் நிற்பரிதேதான்." என்பதனாலும், "மறையினை நிந்தித்தாலு மறைமுதற் பொருளா யுள்ள, கறைமிடற்றிறைவன்றன்னைக் கருத்துற நிந்தித்தாலும், இறை யவனடியார்தீமை நிந்தித்தல் கூடாதென்றும், அறைதருகழுவா யிந்த நிந்தனைக்ககிலத்தின்றே" என்பதனாலுங்காண்க.

(கழுவாய் என்பது பிராயச்சித்தம்.)

## பக்கம் - ௩௫.

"நல்லமருந்துகண்டேன்"

இக்கீர்த்தனத்தில் மருந்தென்று கூறியவை கண்ணைபேகுறிப் பன. 'இருவிழிகளுலகறிந்துந்தமையறியா' வாதலால் (தனக்குத் தானே தோணுவொருமருந்து) என்றும், கண், இருளோடுகூடிய,

வழியிருளாயும், ஒளியோடு கூடியவழி ஒளியாயும், நிற்பதாதலால் (இருளுக்கிருளாயொளிக்கொளியாயுள்ளமருந்து) என்றும், கண், தம்மிடத்துள்ளவரையுந் தேவர்க்கு வந்தபுண் தீராதிருந்து தம்முயிரையும்போக்குவதாகிய பெருந்துயர் விளைத்ததாலும், அதனைப்பறித்துச் சாத்திய பின்னரே அப்புண்தீர்ந்து தம்முயிர் நிலைத்தபடியாலும், (என்னைப்பிரிந்தென்னுயிர்ந்தகள்ள மருந்து) என்றுங்கூறினர். நன்மைசெய்யவல்ல அக்கண் தம்மைப்பிரிந்தபின்பு தமக்கு நன்மை செய்தமையால், (கள்ளமருந்து) என்றனர். இவ்வுபாயந்தமக்குத் தோன்றிச்செய்யாதிருப்பின், தம்உயிர் நீங்கியேயிருக்குமென்பது கருத்து. மற்றையவை வெளிப்படை.

திண்ணப்பிரான் தமது தேவரையே யாவரினும் பெரியாரென்று கருதினராதலால், அவர்க்குவந்த புண்ணைத்தீர்த்த மருந்தை (எங்கள் தேவர் புண்ணைத்தீர்க்கும்) "பெருமருந்து" என்றாரென்க.

"வெய்யநரகில் . . . . மிருந்தார்."

இக்கண்ணியின் கருத்தையும் கண்ணப்பசருக்கத்திற் காண்க. இதை ஒட்டியே அடுத்த கீர்த்தனமும் செய்யப்பட்டது. பின்னும், துன்புற்று வருந்தினரென்றமையால், நாயனாரது அளவிறந்த அன்பின்பெருமை வெளிப்படுகின்றது.

## பக்கம் - ௩அ.

"மன்னுமசுரன் . . . . நாணமுறவே."

" சலந்தராசுரனைமடிக்கச்சிவபெருமான்றமதுதிருவடியாலமைத்த சக்கரத்தை, விஷ்ணு கண்ணைப்பறித்துச் சாத்திப்பெற்றார். இதனை- 'தடமலராயிரங்கள் குறைவொன்றதாக நிறைவென்று தன்கணதனில், உடன் வழிபாடு செய்ததிருமாலை யெந்தை பெருமானு வந்து மிகவுஞ், சுடரடியாலுமுயன்றுசுழல்வித்தரக்கனிதயம் பிளந்தகொடுமை, யடல்வலியாழி யாழிபவனுக்களித்தவவனுநமக்கொர்சரணே' என்னுந்தேவாரத்தாற்காண்க. திருமால் சக்கரம் பெறவேண்டியோர் கண்ணைப்பறித்தனர். நமதுநாயனார் அவ்வாறொன்றையும் வேண்டிச் செய்திலர். ஆகவேயது காமியமும், இதுநிஷ்காமியமுமாயிற்று. ஆகையால், நாயனார் ஒருகண்ணைப்பறித்தபோதே நாணவேண்டிய

வராகிய அத்திருமால், இவருநம்மைப்போலொரு கண்ணைத்தானே பறித்தாரென்ற அம்மாத்திரத்திலே திருப்தியடைந்தவராகி நாயனுர் மற்றொருகண்ணையும் பேர்க்கத்தொடங்கிய காலத்திற் பெருநாணமுற் ருரென்க.

"சிவபெருமானடியவர் துன்பம்பொருரெனல்."

இத்தலைப்பின் கீழிருக்குங்கீர்த்தனம், புராணிகர் கூற்ருய்க் கேட்போர்களுக்குச்சிவபெருமானது அளவிறந்த கருணைத்திறத் தைச்சமயோசிதமாயெடுத்துணர்த்தி, 'திண்ணனுர் கண்ணிலூன்றத் ரித்திலர் தேவதேவர்' என்னும்பெரியபுராணக்கருத்தை விரித்துரைப் பது. அடியவர் விருப்பு வெறுப்பற்றவராயினும், அவர்க்கொரு சிறிது இடர்வரினும் சிவபிரான் தரியாரென்றும், மார்க்கண்டேயர் முதலினேர்விஷயத்தில்தரித்திலரென்றும், முதற்கண்ணைப்பேர்த்த போதே ஏன் தடுக்கவில்லையெனின், அன்பர் பெருமையையுலகுக்கு ணர்த்துமாறு பொறுத்திருந்தாரென்றும், ஒருகண்ணைப்பேர்க்கத்தொ டங்கியபோதே அன்பர் திறம் வெளிப்படலால் தடுத்திருக்கலாமே யெனின், "இவ்வன்பர் ஓர் கண்ணைப்பேர்த்ததனுலேயே உயிர்போய் விடுமோ? மற்றையரைப்போலுயிர் துறக்கத்துணிந்தனரோ? ஒருவன் உயிரினைப்பிரிய நேர்ந்தாலுங் கண்ணைப்பிரியப்பொருனென்ருலோ, இரண்டுகண்ணையும் பேர்த்துச்சாத்தினரோ? உண்மை யன்பென்பது யாண்டுஞ் சுவயப்பிரயோசனங்கருதாததிறமல்லவோ?" என்றுசிலர் குறைகூறினுங்கூறுவராதலால், அன்பர் மற்றொருகண்ணைப்பேர்க்கத் தொடங்கும் வரையும் பொறுத்தருளி, அவர் பெருமையை யாவர்க் கும் ஒப்பமுடிந்ததுணிவாக்கியவுடனே தரித்தில ரென்றும், சராசர வுயிர்கள் மீது கொண்ட அருளே திருவடிவமான வராகலின் தரிப்பா ரோவென்றும், உரைத்துக்கொள்க.

## பக்கம் - ௯0.

"நில்லுகண்ணப்பா - நில்லு நில்லு."

ஸ்ரீகாளத்தியப்பர் 'நில்லு கண்ணப்பா' என்ற திருவாக்குடன் திருக்கரநீட்டித்தடுத்தருளவும் நில்லாது அம்பைக்கண்ணிலே யூன்று கின்றுர் நாயனுர். ஏனெனில், (கண்ணப்பியகாரணத்தாற் பூரமேச

னிட்டழைத்த) கண்ணப்பநாமத்தால் தம்மையாருமழைக்கப்பெறாதவராகையாலும், தாம் மேற்கொண்ட முயற்சியிலே ஊக்கமுடையராயிருந்தமையாலுமென்க. சிவபிரான், அன்ப, நல்லக்கண்ணைப்பறித்திடாமலும் அதனால் நமக்கு மனத்துயர் விளைக்காமலும் நில்லு' என்று தடுத்தருளினர். நாயனார், சுவாமீ ! உமக்காகத்தான் பறிக்கிறேன் தேவர்க்கு ஒருதுன்பமுமில்லாமலிக்கணமே செய்கிறேனென்று பின்னும் ஊன்றினர். சிவபிரான், புண்ணிருந்தது போச்சு என்றனர். நாயனார், 'அதெவ்வாறு பரிகாரஞ்செய்யுமுன் போகும்? என்று பின்னும் ஊன்றினர். சிவபிரான், ஒருகண்ணைத்தீர்த்ததே போதும் என்றனர். (இதனால் உனக்கும் நமக்கும் ஒருகண் நன்றாயிருக்கட்டும் என்பது கருத்து. இதற்கு, உன்னொரு கண்ணைத்தீர்த்ததே உன்னன்பைக்காட்டுவதற்குப்போதும் என்று உள்ளுறைப்பொருளுங் காண்க.) நாயனார், ஒன்றுக்குப்பரிகாரஞ்செய்து மற்றொன்றுக்குச் செய்யாது விடுவது தகுதியன்று. அதனையும் வாசியாக்கிப்பார்ப்பேனென்று பின்னும் ஊன்றினர். (நாயனார் தமக்குக்கண்ணிரண்டுமில்லையாய் விடுமேயென்பதைக்கருதினாரில்லை.) மேலே சிவபிரான் சொஸ்தமானதை யெதனால் காண்பாயென்றனர். நாயனார், முன்னேயனுபவமாகக்கண்டிருப்பதால் தீர்ந்தேவிடுமென்று பின்னும் ஊன்றினர். பின்பு சிவபிரான், அன்பனே, நீயிதையும் பேர்த்திடிலுதவியாரெனக்கு; இதை யெண்ணியாகிலும் நில்லு என்றருளினர் - அதற்குநாயனார் தடைப்பட்டுநின்றார். தடைப்பட்டது தம்பயன் கருதியன்று என்பது காண்க.

---

அநுபந்தமுற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

K. CHIDAMCARANATHA MUDALIAR
23 JUN 1914
SH...